இந்நடைமுறைக்குப் பதிலாக சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் மண்டலத்திற்கு ஒன்று என அரசு மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான காலிமனைகளில் தொழுவங்களை அமைத்து, அத்தொழுவங்களில் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைப் பராமரித்துக்கொள்ளும் ஏற்பாடுகளைச் செய்து கொடுத்து, அதற்குரிய கட்டணத்தையும் வசூலிக்கும் நடைமுறையை உருவாக்கிக் கொடுத்தால், கால்நடைகள் தெருக்களில் சுற்றித் திரியும் பிரச்சினையைத் தவிர்ப்பதோடு, கால்நடை வளர்ப்போரின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதாக அமையும். எனவே, அரசு இக்கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் ஏற்றியாகிவிட்டதே, நீங்கள் உரையை முடியுங்கள். (மணியடிக்கப்பெற்றது) திரு. அருண்மொழிதேவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

பிற்பகல் 1–55

5. அறிவிப்பு

பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19–4–2022 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 3–நீதி நிருவாகம், 24-சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), 33–சட்டத் துறை, 28–செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), 30–எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகியன 27–4–2022 (புதன்கிழமை) அன்றும், 27–4–2022 அன்று எடுத்துக்கொள்வதாக இருந்த மானியக் கோரிக்கை எண்கள் 27–தொழில் துறை மற்றும் 46–தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகியன 19–4–2022 (செவ்வாய்க்கிழமை) அன்றும் விவாதம் மற்றும் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பெறும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.